பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 61331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன்

மலர்: 19] சென்னை: கார்த்திகை 4 (20—11—71) சனி    வெளியூர்: கார்த்திகை 5 (21—11—71) ஞாயிறு [இதழ்: 132

## அதிக விளைச்சல் தரும் புதிய ரக நெல்

திருச்சி, நவ. 20—

ஆண்டு முழுதும் பயிர்களுக்குப் பூச்சி மருந்து தெளிப்பதற்காக ரூ. 50 இலட்சம் செலவில் 5 ஹெலிகாப்டர்களை வாங்குவது பற்றித் தமிழ்நாடு அரசு ஆலோசித்து வருகிறது"

என்று தமிழக அரசின் வேளாண்மைத் துறை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் அவர்கள் இங்கு தெரிவித்தார்.

'ஐ. ஆர். 24' என்ற புதிய பிலிப்

(4-ம் பக்கம் பார்க்க)

# பாகிஸ்தானுக்குப் புத்தி தெளியும் அறிகுறி

## தூதுவர் மாற்றம் புதிய சூழ்நிலையை உருவாக்குமா?

புதுடில்லி, நவ. 20—

இந்தியாவிலுள்ள பாகிஸ்தான் தூதுவர் சஜ்ஜத் ஐதர் துருக்கி நாட்டுக்கு மாற்றப்பட்டிருக்கிறார்; இவர், இந்தியாவுடன் எப்போதுமே கடுமையாக நடந்துகொள்பவராவார் என்றும். இவரை மாற்றல் செய்ததற்குத் தனது இராசதந்திரத்தில் ஒரு புதிய தோற்றத்தை ஏற்படுத்தப் பாகிஸ்தான் முயற்சிப்பதே காரணமாகும் என்றும் நோக்கர்கள் கருதுகின்றனர்.

இவர் மாற்றப்பட்டதில்கூடப் பாகிஸ்தான் மிக எச்சரிக்கையாகச் செயல்பட்டிருக்கிறது; தூதுவர் ஒருவரை மாற்றும்போது சம்பந்தப்பட்ட நாட்டிற்கு அறிவிக்க வேண்டும் என்ற நடைமுறை ஏதும் இந்தியா--பாகிஸ்தான் நாடுகளிடையே இல்லையாயினும், தனது தூதுவரை மாற்றும் திட்டத்தைச் சூசகமாகப் பாகிஸ்தான் தெரிவித்திருந்ததாம்.

'பாகிஸ்தான் தனது தூதுவரைத் திரும்பப் பெறுகிறது' என்ற தவறான கருத்து ஏற்படாமல் இருக்கவே இத்தனை எச்சரிக்கையுடன் பாகிஸ்தான் செயல்படுகிறதாம்.

இந்தியா--பாகிஸ்தான் நாடுகளிடை ஏற்பட்டுவரும் கருத்து மாறுபாடுகளுக்கு, சஜ்ஜத் ஐதரின் போக்கு ஒரு முக்கியக் காரணமாகும் என்று இங்கு கருதப்பட்டுவந்தது; ஆகவே, அவரது மாற்றம், இங்கு பலராலும் வரவேற்கப்படுகிறது.

### இந்தியத் தூதுவரிடம் யாகியா கூறியதென்ன?

புதிய சூழ்நிலை குறித்து இந்திய அரசுடன் விவாதம் நடத்தும் பொருட்டு இந்தியத் தூதுவர் ஜே. கே. அடால் இங்கு வந்திருக்கிறார்; பாகிஸ்தானின் அதிபர் யாகியா கானிடம் அவர் ஏற்கனவே பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார். அப்போது யாகியா கான் கூறிய யோசனைகளை அடால், இந்திய அரசிடம் எடுத்துரைப்பார் என்று தெரியவருகிறது.

# வங்க தேச அகதிகளுக்கு ஆகும் செலவு

## நடப்பு ஆண்டில் ரூ. 525 கோடி

புதுடில்லி, நவ. 20—

நாடாளுமன்ற மேலவையில், வங்காள தேச அகதிகள் பற்றிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், கீழ்க்கண்ட தகவல்களை அமைச்சர் காடில்கார் தெரிவித்தார்:—

வங்காள தேசத்திலிருந்து இதுவரையில் 97 இலட்சம் அகதிகள் இந்தியாவுக்கு வந்து சேர்ந்திருக்கிறார்கள்.

ஒரு அகதிக்கு நாள் ஒன்றுக்கு சராசரி ரூ. 3 வீதம் செலவிடப்படுகிறது.

தற்போது அகதிகளுக்கு அளிக்கப்பட்டுவரும் உணவு மற்ற வசதிகள் அடிப்படையில் பார்க்கும்போது, நடப்பு ஆண்டில் மட்டும் மத்திய அரசுக்கு ரூ. 525 கோடி செலவாகும்.

வங்காள தேச அகதிகளுக்காக வெளிநாடுகளிடமிருந்து இதுவரையில் கிடைத்துள்ள உதவி ரூ. 50 கோடிமுதல் ரூ. 55 கோடி வரையில் இருக்கும்; இதில் ரொக்கமாக மட்டும் கிடைத்தது ரூ. 10.78 கோடி ஆகும்."

இன்னொரு கேள்விக்கு வெளிநாட்டு அமைச்சர் சுவரண் சிங் பதிலளிக்கையில் தெரிவித்ததாவது:—

"வங்காள தேச அகதிகளுக்காக ஐ. நா. நிறுவனங்கள் ரூ 118.50 கோடி உதவி அளிப்பதாக வாக்குறுதி அளித்திருக்கின்றன."

# பிளேக் நோய்த் தடுப்பு

## உலக சுகாதார நிறுவனத்தின் உதவி

சென்னை, நவ. 20—

தமிழகத்தின் சில பகுதிகளில் பிளேக் நோய் அபாயம் கருதி, உலக சுகாதார நிறுவனம் 35,000 குப்பி தடுப்பு ஊசி மருந்தை இரண்டாவது தடவையாக அனுப்பிவைக்கிறது.

ஏற்கனவே 12,000 குப்பு மருந்தை அனுப்பிவைத்திருந்தது.

# பாகிஸ்தான் பட்டாளம் ஓட்டம்

கிருஷ்ணநகர், நவ. 20—

வங்க தேச விடுதலைப் படையினர் பாகிஸ்தான் இராணுவத்தினருக்குப் பெரும் அளவில் தொல்லை கொடுப்பதாகக் கூறப்படுகிறது; பாகிஸ்தான் அரசுக்கு இது மிகுந்த கவலையைக் கொடுத்திருக்கிறதாம்.

நாள்தோறும் ஏராளமான இராணுவத்தினர் சொல்லப்படுவதாகவும், குஸ்தியா மாவட்டத்தின் உள்பகுதியில் இராணுவத்தினருடன் கடுமையான போராட்டத்தில் விடுதலைப்படை ஈடுபட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

இம்மாவட்டத்தில் 900 சதுர கிலோ மீட்டர் பகுதியை விடுதலைப்படை மீட்டு -- தங்கள் ஆதிக்கத்தில் கொண்டுவந்து விட்டதாகவும் கூறப்படுகிறது.

பல எல்லைச் சாவடிகளிலிருந்தும் பாகிஸ்தான் இராணுவம் துரத்தப்பட்டு விடுதலைப் படையினர் அவைகளைக் கைப்பற்றியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

# கூவத்தில் உல்லாசப் படகு

## அடுத்த ஆண்டுத் துவக்கத்தில் விடப்படும்

சென்னை, நவ. 20—

கூவம் சீரமைப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக ஏற்படுத்தப்பட்டு வரும் படகுக் கழகத்தின் (போட் கிளப்) பணி ஏறக்குறைய முடிவடையும் தறுவாயில் இருக்கிறது; புத்தாண்டுத் துவக்கத்தில் இது துவக்கி வைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கூவம் சீரமைப்புப் பணியும் கடைசிக் கட்டத்தில் இருந்துவருகிறது. இந்தப் படகுக் கழகம் ரூ. 3.5 இலட்சம் செலவில் அமைக்கப்படுகிறது.

கூவத்தின் கழிமுக வாயிலில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் இந்தப் படகுச் சங்கம், இருப்பு வாராவதியிலிருந்து சேத்துப்பட்டு வரையில் உல்லாசப் படகுகளைவிடத் திட்டமிட்டிருக்கிறது.

விசைப் படகுகளும், சாதாரணப் படகுகளும் இதற்குப் பயன்படுத்தப்படும்.

இக்கழகத்தில் சிற்றுண்டி நிலையம் ஒன்று அமைக்கவும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

# தொழில் நகரமாக உருவெடுக்கிறது மணலி

## ரூ. 150 கோடி முதலீட்டில் பல்வேறு தொழில்கள்

### 1,600 ஏக்கர் நிலப் பரப்பில் அமையும்

சென்னை, நவ. 20—

நைலான் இழைத் தயாரிப்புத் தொழில் நிறுவனம் ஒன்றுக்காகத் தமிழக அரசு 150 ஏக்கர் நிலத்தை, மணலி தொழிற்சாலைப் பகுதியில் ஒதுக்கியிருக்கிறது.

இங்கு பெரிய தொழிற்சாலைகள் பலவும் அமைக்கப்பட்டிருக்கின்றன; மொத்தம் 9 தொழிற்சாலைகளுக்கு இங்கு 1,600 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே சென்னை எண்ணெய்த் துப்புரவு ஆலை, சென்னை உரத் தொழிற்சாலை, நாக்பால் அம்பாடி ஆகிய மூன்று தொழிற்சாலைகள் இயங்கிவருகின்றன.

மேலும் இந்தியன் ஆர்கானிக், கமனீஸ், தென்னிந்திய கார்பானிக் ஆசிட், சதர்ன் அக்ரி பர்னேஸ், லாயிட்ஸ் பிடுமன், ஸ்ரீராம் பைபர்ஸ் ஆகிய நிறுவனத் தொழிற்சாலைகள் இங்கு உருவாக்கப் போகின்றன.

இதற்காகக் கையகப்படுத்தப்பட்டிருக்கும் நிலத்தின் மதிப்பு மட்டும் ரூ 50 இலட்சமாகும்.

இப்பகுதியில் இத்தொழிற்சாலைகளுக்காக மொத்தம் ரூ. 150 கோடி முதலீடு செய்யப்பட்டிருக்கிறது.

இப்பகுதியின் வளர்ச்சிக்கும் -- தொழில் வளர்ச்சிக்கும் தமிழக அரசு எல்லாவிதமான வசதிகளும் செய்து கொடுக்கிறது.

# சிகாகோ பல்கலைக் கழகத்தில் உரையாற்றுவார் கலைஞர்

## இன்று கென்னடி முனை ஏவுகணைத் தளத்தைப் பார்வையிடுகிறார்

### முழு உடல் நலம் பெற்றுச் சுற்றுப்பயணத்தைத் தொடர்ந்தார்

வாஷிங்டன், நவ. 20—

மருத்துவமனையிலிருந்து இன்று வெளியேறும் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் இன்று கென்னடி முனைக்குச் சென்று ராக்கெட் தளத்தைப் பார்வையிடுவார்; சந்திரப் பயணம் போன்றவற்றிற்கான விண்வெளிக் கணைகளை ஏவுகின்ற தளமாகும் இது.

அங்கிருந்து நவ. 22 அன்று சிகாகோ செல்லுவார்; நவ. 23, 24 ஆகிய இரு நாட்களும் சிகாகோவில் இருப்பார்; அங்குள்ள பல்கலைக்கழகத்தில் உரையாற்றுவார்.

நவ. 25 அன்று பபேலோ நகரைப் பார்வையிடுவார்; அன்றே நியூயார்க் செல்வார்; அங்கு தமிழர்களையும், அமெரிக்க அரசியல் தலைவர்களையும் சந்திப்பார்; தமிழ்ச் சங்கத்தில் உரையாற்றவும் இசைந்துள்ளார்.

நியூயார்க்கிலிருந்து புறப்பட்டு நவ. 30 அன்று வாஷிங்டன் நகரை அடைந்து--அங்கு மூன்று அல்லது நான்கு நாட்கள் தங்கிவிட்டுத் தமிழகத்திற்குத் திரும்புவார்.

இந்தச் சுற்றுப்பயணத்தின்போது முதலமைச்சர், அமெரிக்க அரசியல் முன்னணியினரைச் சந்திப்பார்; இந்திய மாணவர்களுடன் அளவளாவுவார்.

### நாவலர் நலம் விசாரித்தார்

நேற்று காலை 9-மணியளவில், கல்வி அமைச்சர் நாவலர் அவர்கள் முதல்வர் கலைஞருடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு உடல்நலம் பற்றி விசாரித்தார்.

முதல்வர் சனியன்று மருத்துவமனையைவிட்டு வெளியேறி வாஷிங்டன் சென்று பயணம் மேற்கொள்ளப் போவதாக அறிவித்தார்கள்.

தாம் உடல் நலத்தோடு இருப்பதை நண்பர்களுக்கு அறிவிக்கும்படி கோரியுள்ளார்.

மேலும், இங்குள்ள சூழ்நிலைபற்றி கேட்டறிந்தார்கள்.

முதல்வர் தாயகம் திரும்பும் தேதியை பின்னர் அறிவிப்பதாகக் கூறினர்.

### கே. ஏ. மதியழகன் தொடர்பு

சட்டப் பேரவைத் தலைவர் கே. ஏ. மதியழகன் அவர்களும் முதல்வர் கலைஞரிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு உடல் நலனை விசாரித்தறிந்தார்.

மற்றும் அமைச்சர் எஸ். இராமச்சந்திரன், காட்டூர் கோபால் எம்.எல்.சி. ஆகியோரும் தொலைபேசியில் தொடர்புகொண்டு உடல் நலம் விசாரித்தனர்.

# வெளிநாட்டுத் தொழிலதிபர்களை கவரும் தமிழகம்

## அமைச்சர் செ. மாதவன் பெருமிதம்

### 'தொழில் அமைதியும் அரசு ஒத்துழைப்புமே காரணம்' என விளக்கம்

சென்னை, நவ. 18—

"இந்தியாவின் தொழில் வளர்ச்சியில் அமெரிக்கா போன்ற முன்னேறிய நாடுகளெல்லாம் அக்கறை காட்டி வருகின்றன; அமெரிக்காவின் கூட்டு முயற்சியோடு ஏறத்தாழ 640 தொழிற்சாலைகள் இந்த நாட்டில் நடக்கின்றன.

"இப்படிப்பட்ட கூட்டு முயற்சி உலக நாடுகளிடையே நல்ல நட்புறவு உருவாக வழி வகுக்கும்; தமிழ்நாட்டுக்கு வருகின்ற அயல்நாட்டுத் தூதுக் குழுவினர், இங்கே தொழில் துவங்குவதற்குப் பேரார்வம் காட்டிவருகின்றனர்; இதற்குக் காரணம், தமிழ்நாட்டில் தொழில் அமைதி நிலவிவருவதும் அரசின் ஒத்துழைப்பு தொழில் துவங்குவோருக்குக் கிடைத்து வருவதும்தான்" என்று தொழில் அமைச்சர் செ. மாதவன் அவர்கள் கூறினர்.

இந்தியத் தொழில் வளர்ச்சியில் அமெரிக்கத் தொழில் கூட்டுறவு வகிக்கக்கூடிய பங்கு பற்றிய ஒரு கருத்தரங்கைத் தமிழகத் தொழிலமைச்சர் செ. மாதவன் துவக்கிவைத்தார்.

இந்திய -- அமெரிக்க வர்த்தகச் சபையின் தென்னிந்தியக் கிளை இந்தக் கருத்தரங்கை ஏற்பாடு செய்திருக்கிறது.

அமைச்சர் செ. மாதவன், தமது உரையில் கூறியதாவது:—

"அந்நியச் செலாவணியைச் சேமிக்க வேண்டும் -- நாட்டின் அரசியல் நியதிகளை நிலைநிறுத்த வேண்டும் -- என்ற அடிப்படையின் பேரில் அந்நியத் தொழில் கூட்டுறவு பற்றிய இந்தியாவின் கொள்கை உருவாகியுள்ளது.

இந்தியாவைச் சேர்ந்த அல்லது வெளிநாடுகளைச் சேர்ந்த தனியார் மூலதனத்தின் அவசியத்தை இந்தியாவின் கொள்கை புறக்கணிக்கவில்லை.

தொழில்களைத் துவக்குவதற்கு வேண்டிய இடவசதி -- மின்சார வசதி -- தண்ணீர் சப்ளை போன்ற அடிப்படை அம்சங்களையும், சலுகைகளையும் அளிப்பதுடன் விரைவில் தொழில்களை நடத்துவதற்கு வேண்டிய உதவிகளை தமிழக அரசு அளிக்கிறது.

அண்மையில் நான் அமெரிக்கா சென்றபோது, தமிழ்நாட்டின் தொழில் துறை நிலைபற்றி அங்கு திருப்தி நிலவியதைக் கண்டேன்.

தமிழ்நாட்டில் தொழில்களைத் துவக்க வருவோரை இந்த அரசு வரவேற்கிறது; தனியார் துறையும் அரசுத் துறையும் இணைந்த கூட்டுத் துறையில் இந்த அரசு மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கிறது.

அமெரிக்காவுக்கும் -- இந்தியாவுக்குமிடையே நல்ல நட்புறவு ஏற்படத் தக்க விதத்தில் இந்த கருத்தரங்கம் அமைந்திட வேண்டுமென நான் விரும்புகிறேன்."

கருத்தரங்குக்குத் தலைமைவகித்துப் பேசிய தொழிலதிபர் ஏ. எம். எம். அருணசலம், 'செய்திறன் -- தொழில் நுணுக்க அறிவு ஆகியவற்றை வெளிநாடுகளுக்கு அளிக்கும் பிரச்சினையில் அமெரிக்கா இறுக்கமானதொரு போக்கை முன்னேறாத நாடுகளிடம் கடைபிடிக்கக்கூடாது' என்று கூறினர்; 'பிரிட்டன் போன்ற நாடுகள் இந்தப் பிரச்சினையில் நெளிவு சுளுவான போக்கைப் பின்பற்றுகின்றன' என்றும் அவர் சுட்டிக்காட்டினர்.

# இந்தியா -- சீன நட்புறவு

## மீண்டும் புதுப்பிக்க நடவடிக்கை

### வெளியுறவு அமைச்சர் சுவரண் சிங் அறிவிப்பு

புதுடில்லி, நவ. 19—

"இந்தியாவும் -- சீனவும் விரைவில் முழுத் தகுதி பெற்ற தூதர் பரிமாற்றங்களைச் செய்து கொள்ளக்கூடும்"

என்று, நாடாளுமன்றத்தில் வெளியுறவுத் துறை அமைச்சர் சுவரண் சிங் அறிவித்தார்.

மேலும் சீனவுடன் கலாச்சார -- வணிகத் தொடர்புகளைப் பெருக்கிக் கொள்ளவும் இந்தியா முயன்றுவருவதாக அவர் தெரிவித்தார்.

ஏற்கனவே பீகிங்கில் நடைபெற்ற ஆசிய டேபிள் டென்னிஸ் போட்டியில் கலந்துகொள்ள இந்தியா ஒரு குழுவை அனுப்பிவைத்திருப்பதுடன், நடைபெறவிருக்கும் காண்டன் கண்காட்சியிலும் இந்தியா கலந்துகொள்ளக்கூடும் என்றும் சுவரண் சிங் கூறினர்.

அடுத்த ஆண்டு டில்லியில் நடைபெறவிருக்கும் மூன்றுவது ஆசியக் கண்காட்சியில் சீனவும் கலந்துகொள்ளக்கூடும் என்று நம்புவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

# பேராபத்திலிருந்து நாட்டை மீட்க....

# குடும்ப நலத் திட்டத்துக்கு மக்களாதரவுத் தேவை

## புதிய அறுவைச் சிகிச்சைப் பகுதியைத் திறந்துவைத்து பேராசிரியர் க. அன்பழகன் வலியுறுத்தல்

சென்னை, நவ. 20—

"ஏராளமாகப் பணம் செலவிட்டு -- குடும்ப நலத் திட்டத்தால் ஏற்படக்கூடிய நற்பலன்களைப் பிரச்சாரம் செய்தும், அறுவைச் சிகிச்சைக்குப் பல சலுகைகள் செய்து கொடுத்தும், தாய்மார்கள், குடும்பக்கட்டுப்பாட்டு முறைகளைக் கடைபிடிக்க அஞ்சுவது வருந்தத்தக்கது"

என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் குறிப்பிட்டார்.

எழும்பூர் அரசினர் தாய் -- சேய் நல மருத்துவமனையில் பெண்கள் கருத்தடை அறுவைச் சிகிச்சைக்கான புதிய பகுதியை மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் நவ. 17-ல் திறந்து வைத்தார்.

20 படுக்கைகள் கொண்ட இந்தப் பகுதி நவீன மருத்துவ வசதிகளுடன் ரூ. 1,19,000 செலவில் மத்திய அரசாங்கக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்டிருக்கிறது.

இந்த வார்டில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளுடன்பொதுவாகவோ, தனிப்பட்ட முறையிலோ தன் அறையிலிருந்தே மருத்துவ அதிகாரி தகவல்களைக் கூறக்கூடிய ஒலிபரப்பு ஏற்பாடுகளும் இந்த வார்டில் செய்யப்பட்டிருக்கின்றன.

20 படுக்கைகள் கொண்ட மற்றொரு வார்டு ஒன்றும் கட்டத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

இந்த விழாவில் பேசிய நல்வாழ்வுத்துறைச் செயலாளர் அம்பா சங்கர், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தில் நேரடியான அக்கறை எடுத்துக்கொள்ளும்படி மாவட்டக் கலெக்டர்களுக்கு அண்மையில் அரசாங்கம் சுற்றறிக்கை அனுப்பியதாகவும், அதற்கு நல்ல பலன் கிடைத்திருப்பதாகவும் சொன்னர்.

குடும்பக் கட்டுப்பாட்டுத் துறை இயக்குநர் டாக்டர் பி. ஆர். பாலகிருஷ்ணன் அனைவரையும் வரவேற்றார்.

எழும்பூர் மருத்துவமனை சூப்பரின்டெண்டெண்டு டாக்டர் என். இராஜசேகரன் ஓர் அறிக்கையைப் படித்தார்.

மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் இரத்தினக் கண்ணன் நன்றி கூறினர்.

அமைச்சர் அன்பழகன் அவர்கள் தமது திறப்புரையில், அவர் மேலும் கூறியதாவது:—

"குடும்ப நலத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட அரசுடன் பொதுமக்களின் ஒத்துழைப்பும் அவசியம் தேவை.

இந்தத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப்படவில்லையென்ருல், நாட்டின் எதிர்காலத்துக்கே அது ஆபத்தாக முடியும் சூழ்நிலை ஏற்பட்டுவிடும்.

இன்று திறக்கப்பட்டுள்ள இது போன்ற பெண்கள் கருத்தடைப் பிரிவுகளில், பெண்களுக்குத் தகுந்த கருத்தடை பிரசாரம் செய்யப்படும்; ஆண்டுக்கு 3,000 மகப்பேறு நடக்கும் மாவட்டத் தலைமை மருத்துவ மனைகளில் இதுபோன்ற நிலையங்கள் அமைக்க மத்திய அரசு அனுமதி வழங்கியிருக்கிறது.

எல்லா மாவட்டத் தலைமை மருத்துவமனைகளிலும் இது போன்ற நிலையததை ஏற்படுத்த வேண்டும் என்று மத்திய அரசை மாநில அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது.

தீவிரத் திட்டங்களின் மூலம் இந்த ஆண்டுக்குள் 1,70 000 கருத்தடை அறுவைச் சிகிச்சைகள் செய்து முடிக்க அரசு திட்டம் தீட்டி நிறைவேற்றி வருகிறது.

இந்தத் திட்டம் வெற்றி பெறப் பத்திரிகைகள் தங்கள் முழு ஒத்துழைப்பும் தந்து உதவ வேண்டும்; மக்களுடைய இந்தத் திட்டம் குறித்து நல்ல தகவல்களை வெளியிட்டுத் திட்டம் வெற்றி பெற உதவ வேண்டும்.

கருத்தடைத் திட்டங்கள் வெற்றி பெறப் பணிபுரியும் டாக்டர்களுக்கு மற்றத் துறைகளில் பணிபுரியும் டாக்டர்களைவிடச் சில வசதிகளை செய்து தருவது குறித்தும் அரசு பரிசீலித்து வருகிறது."

# கிராமப்புறப் பகுதிகளில் வேலை வாய்ப்புத் திட்டங்கள்

## நாடாளுமன்ற மேலவையில் கேள்விகள்

### நடைமுறை நிலவரங்கள் பற்றி அமைச்சர் தகவல்

புதுடில்லி, நவ. 19—

கிராமப் பகுதிகளில் வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்கான தீவிரத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் காலதாமதம் ஏற்படுவது பற்றி நாடாளுமன்ற மேலவையில் எல்லாத் தரப்பு உறுப்பினர்களும் அதிருப்தி தெரிவித்தார்கள்.

இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக நடப்பு ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ 50 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இந்தத் திட்டத்தின்கீழ் வேலை வாய்ப்பு எத்தனை பேருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்ற விவரத்தையும் -- இதுவரையில் எவ்வளவு பணம் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்ற தகவலையும் வேளாண்மைத் துறைத் துணையமைச்சர் பேராசிரியர் ஷேர் சிங் தர இயலவில்லை; உறுப்பினர்கள் பலர், அமைச்சரைப் பேசவிடாமல் தடுத்துவிட்டனர்.

"இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் மாநில அரசுகளிடமிருந்து பிரேரணைகள் கிடைப்பதில் காலதாமதம் ஏற்பட்டது; சுமார் ரூ. 37.91 கோடி செலவில் 341 மாவட்டங்கள் சம்பந்தப்பட்ட பிரேரணைகள் அங்கீகரிக்கப்பட்டுவிட்டன; இவற்றுக்கு அவசியமான நிதி மாநில அரசுகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது" என்று அமைச்சர் ஷேர் சிங் கூறினர்.

உறுப்பினர்கள் கேட்ட பல்வேறு கேள்விகளுக்கும் பதிலளிக்கையில் அமைச்சர் கூறியதாவது:—

"இத்திட்டத்தின் நடைமுறை வளர்ச்சி அறிக்கைகள் சில மாநிலங்களைத் தவிர, மற்ற மாநிலங்களிடமிருந்து கிடைக்கவில்லை; கிடைத்துள்ள அறிக்கைகளில் சில, ஆகஸ்டுத் திங்கள் இறுதிவரையிலுள்ள காலத்திற்குரியவை; சில அறிக்கைகள் செப்டம்பர் இறுதி வரையிலான காலத்திற்குரியவை; எனவே, எல்லா மாநிலங்களிலும் எத்தனைப் பேருக்கு வேலை அளிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லுவது சிரமமாகும்.

"கிராமப்புறப் பணிகள் திட்டம் மற்றும் பிற திட்டங்களின் வேலை நிறுத்தப்படவில்லை; வேலை வாய்ப்புக்கான தீவிரத் திட்டம், ஏற்கனவே உள்ள மற்ற கிராமப்புறத் திட்டங்களைப் பாதிக்கவில்லை."

# சலவைத்தொழிலாளர்கள் சமுதாயத்திற்கு ஆற்றும் பணி

## அமைச்சர் ப. உ. சண்முகம் பாராட்டு

### திருவொற்றியூர் நகராட்சி விழாவில் பங்கேற்பு --- வருவாயைப் பெருக்கிக்கொள்ள வழிவகைகள் காணுமாறு வலியுறுத்தல்

திருவொற்றியூர், நவ. 20—

"நகராட்சி மன்றங்கள் தங்கள் வருமானத்தைப் பெருக்கிக்கொள்ளும் வழிவகைகளை மேற்கொண்டாக வேண்டும்; மக்களிடம் பணம் வாங்கி அரசுக்குக் கேளிக்கை வரி கட்டாமல் வரி ஏய்ப்புச் செய்பவர்களைக் கண்டுபிடிக்கும் முயற்சியை மேற்கொள்ள வேண்டும்"

என்று உள்ளாட்சி--பேரூராட்சி மன்ற அதிகாரிகளுக்கு வருவாய்த் துறை அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்.

திருவொற்றியூர் நகராட்சியின் சார்பில் பேரறிஞர் அண்ணா-நகராட்சித் தலைவர் மா. வெ. நாராயணசாமி ஆகியோர் பெயரால் 5-வது வட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள இரு பூங்காக்களின் திறப்பு விழாவும்--நகர மன்றத்தின் கலைஞர் கருணாநிதி கூடத்தில் வைக்கப்படவிருக்கும் கல்வியமைச்சர் நாவலர் அவர்களின் திருவுருவப் படத் திறப்பு விழாவும்--ரூ. 43 500 மதிப்புள்ள நிலப்பரப்பில் ரூ. 20,000 செலவில் கட்டடம் -- மின்விளக்கு வசதிகளுடன் நகராட்சியால் அமைக்கப்பட்ட சலவையாளர் துறை திறப்பு விழாவும் நகரமன்றத் தலைவர் மா. வெ. நாராயணசாமி தலைமையில் நடைபெற்றது.

அமைச்சரை வரவேற்று 5 வது வட்ட உறுப்பினர் திரு.வி.கோவிந்தசாமி பேசினர்.

நகரமன்றத்தின் சார்பில் திரு. மா. வெ. நாராயணசாமி அமைச்சருக்கு வரவேற்பிதழ் வழங்கினர்.

நகரமன்றத் துணைத் தலைவர் மு. வரதராசன்--கூறுப்பினர் கே. இரத்தினம் ஆகியோர் பேசினர்.

### நாவலர் படத் திறப்பு

சலவையாளர் துறையையும்—நாவலர் படத்தையும் திறந்து வைத்து அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்கள் நாவலரின் தொண்டுகளையும்--சிறப்புமிக்க குணங்களையும்--பேச்சாற்றலையும் விளக்கிவிட்டு மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"நமக்கு ஆடைகளைத் தூய்மையானதாக ஆக்கித் தரும் சலவைத் தொழிலாளர்கள், தங்கள் வாழ்க்கையில் தூய்மை பெற்றுள்ளனரா என்ருல், 'இல்லை' என்றுதான் கூற வேண்டியிருக்கிறது.

நான், 'தூய்மை' எனக் குறிப்பிடுவது, வாழ்க்கைத்தன்மை—அவர்களது வேலை நிலைமை ஆகியவற்றைக் குறித்துத்தான்; எனவே, அவர்களது வாழ்வில் மறுமலர்ச்சி தோன்றியாக வேண்டும்.

சலவைத் தொழிலாளர்களின் சேவைக்காக இந்தத் தமிழ்ச் சமுதாயம் உரிய முறையில் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறது.

பணத்திற்காக மட்டும் அத்தொழிலாளர்கள் இத்தொழிலைச் செய்யவில்லை; சமுதாயத்திற்கு செய்யும் ஓர் சிறந்த தொண்டாகவே இதனை அவர்கள் கருதுகின்றனர்.

இப்படிப் பணியாற்றும் அவர்களுக்குத் திருவொற்றியூர் நகராட்சி வசதியினைத் தேடித் தந்தமைக்காக மகிழ்ச்சியடைகிறேன்; சலவையாளர்களுக்கான இதுபோன்ற தனி வசதிகள் மற்றுமுள்ள நகராட்சிகளிலும் அமைய வேண்டும்."

# நவீன சாதனங்களுடன் குடிசைவாசிகளுக்கு வீடு

## குடிசை மாற்று வாரியம் திட்டம்

### சிங்கப்பூர் சென்று திரும்பிய வாரியத் தலைவர் இராம. அரங்கண்ணல் தகவல்

சென்னை நவ. 20—

"சிங்கப்பூரில் மூன்று மணி நேரத்திற்கு ஒரு வீடு வீதம் வீடுகள் மிகத் துரிதமாக கட்டிமுடித்துவிடுகிருர்கள்; ஆனல், நமது குடிசை மாற்று வாரியத்தைப் போறுத்த வரையில் இந்தச் சாதனை அதனைவிடச் சிறந்ததாகும்; நமது குடிசை மாற்று வாரியம், ஒரு மணி நேரத்துக்கு ஒரு வீடு வீதம் வீடுகளைக் கட்டி முடித்துவிடுகிறது.

"தமிழ்நாட்டில் குடிசை மாற்று வாரியம் பல்வேறு மாநில அரசுகளையும் கவரும் அம்சமாக இருந்து வருகிறது; இந்த வாரியத்தின் திட்டங்கள் பற்றியும் -- செயல்படும் முறை குறித்தும் அறிந்துகொள்ளும் பொருட்டு பல மாநில அரசுகள் தத்தம் அதிகாரிகளை இங்கு அனுப்பி வைக்கின்றன"

என்று குடிசை மாற்று வாரியத் தலைவர் இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ. அவர்கள் தெரிவித்தார்.

சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் சுற்றுப்பயணம் புரிந்து அங்கெல்லாம் அமைக்கப்பட்டுள்ள குடியிருப்புக்களையும் அவற்றுக்கான திட்டங்களையும் கண்டறிந்து திரும்பிய திரு. அரங்கண்ணல், தாம் திரட்டிவந்த தகவல்கள் குறித்து விவரித்தார். இந்த அனுபவங்களின் அடிப்படையில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் பல புதிய திட்டங்களை வகுக்கப் போவதாகவும் அவர் அறிவித்தார்; அவர் மேலும் கூறியதாவது:—

"தவணை முறையில் -- குடியிருப்போருக்குச் சொந்தமாகும் வகையில் -- குடியிருப்புகளை அமைப்பது இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

"இதன்படி அமைக்கப்படும் புதிய வீடு ஒவ்வொன்றிலும், எரிவாயு அடுப்பு -- மின் அடுப்பு -- மின் விசிறிகள் போன்ற நவீன சாதனங்கள் மாத வாடகைக்கு அளிக்கப்படும்.

(4-ம் பக்கம் பார்க்க)

# இலங்கையிலிருந்து 6,000 .தமிழர்கள்

## ஒரே மாதத்தில் இந்தியாவுக்கு வெளியேற்றப்பட்டனர்

### நாடாளுமன்றத்தில் அமைச்சர் தகவல்

புதுடில்லி, நவ. 19—

மறைந்த தலைமை அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரியும் -- இலங்கைத் தலைமை அமைச்சர் திருமதி சிரிமாவோ பண்டாரநாயகாவும் செய்துகொண்ட ஒப்பந்தப்படி, 15 ஆண்டுகளில் 5 1/4 இலட்சம் இலங்கைத் தமிழர்கள் இந்தியா திரும்ப வேண்டும்.

இதுபற்றித் தமிழ் நாட்டைச் சேர்ந்த உறுப்பினர்கள் கல்யாண சுந்தரம் -- சாமிநாதன் ஆகியோர் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையில், அகதிகள் மறுவாழ்வுத் துறை அமைச்சர் காடில்கர் கூறியதாவது :—

"கடந்த அக்டோபர் மாதத்தில் மட்டும் இலங்கைத் தமிழர்கள் 6,000 பேர் இந்தியாவுக்கு வந்து சேர்ந்திருக்கிருர்கள்.

"இந்த மாதம் இலங்கைத் தமிழர்கள் யாரும் வரமாட்டார்கள் என்று கருதப்படுகிறது; ஏனென்ருல், அக். 30-ம் நாளிலிருந்து சனவரி முதல் வாரம் வரையில், பருவநிலை காரணமாகக் கப்பல் போக்குவரத்து இரத்து செய்யப்பட்டிருக்கிறது."

இலங்கைத் தமிழர்கட்கு வேலை வாய்ப்பு அளிக்க மத்திய அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளை அமைச்சர் விளக்கினர்.

இதற்காக, சென்னை -- விசாகப்பட்டினம் ஆகிய இடங்களில் தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஆவலைத் தூண்டிடும் அளவற்ற பரிசுகள் உங்களுக்காகவே!

மொத்தப் பரிசுத் தொகை:

ரூ. 20,00,000*

மொத்தப் பரிசுகள் 5331

இன்றே வாங்குங்கள்

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு

ஒரு சீட்டின் விலை ஒரு ரூபாய் தான்.

குலுக்கல் நாள்:
30-11-1971

முதல் சிறப்புப் பரிசு

ரூ. 2,50,000

(பொதுவாக எல்லா வரிசைகளுக்கும்)

வழக்கமான பரிசுகள் (ஒவ்வொரு வரிசைக்கும்)

ஒரு இரண்டாவது பரிசு ரூ. 1,00,000

| | | |
|---|---|---|
| 5 மூன்றுவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 10 ஆயிரம் | ரூ. | 50,000 |
| 10 நான்காவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. 5 ஆயிரம் | ரூ. | 50,000 |
| 50 ஐந்தாவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. ஆயிரம் | ரூ. | 50,000 |
| 1000 ஆருவது பரிசுகள் ஒவ்வொன்றும் ரூ. நூறு | ரூ. | 1,00,000 |
| | ரூ. | 3,50,000 |

இதுவரை தமிழ்நாடு பரிசுச் சீட்டால் உருவாகியுள்ள லட்சாதிபதிகள்: 258

வெளியீடு: இயக்குநர், செய்தி, விளம்பரத்துறை, தமிழ்நாடு அரசு, சென்னை-9

எல்லா விவரங்களுக்கும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டு, சென்னை-2

*5 வரிசைகள் வெளியீட்டுக்குரியது.

செலவு ஒரு ரூபாய்

வரவோ பல லட்ச ரூபாய்

# வரி விதிப்பு முறையில் மாறுதல்

## விரிவான ஆய்வு நடத்தும் காலம் வந்துவிட்டது!

### கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் கருத்துரை

சென்னை, நவ. 30—

"தற்போதைய வரி விதிப்பு முறை பற்றி அரசாங்கம் ஒரு விரிவான ஆய்வை மேற்கொள்ளுவதற்கான காலம் வந்துவிட்டது" என்று கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கூறினர்.

"தற்போதைய வரி விதிப்பு முறையைச் சீரமைத்து, எளிமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளைத் திட்டமிட வேண்டும்" என்றும் அவர் கருத்தறிவித்தார்.

பட்டதாரிகள் சங்கம் வரி விதிப்புப் பற்றி ஒரு வகுப்பு நடத்தியது; அதன் நிறைவு நாளன்று நடந்த நிகழ்ச்சிக்கு அமைச்சர் நாவலர் தலைமை வகித்துப் பேசினர்.

"மறைமுக வரிகள் பற்றிய அமைப்பை முற்றிலும் சீர்திருத்த வேண்டும்; இம்முயற்சியில் பட்டதாரிகள் சங்கம் போன்ற தனிப்பட்ட நிறுவனங்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் அரசாங்கத்திற்கு நிச்சயமாக உதவியாக இருக்கும்"

என்றும் குறிப்பிட்டார்; அமைச்சர் நாவலர் மேலும் கூறியதாவது :—

"நேர்முக வரிகள் சம்பந்தமாகச் சென்ற பல ஆண்டுகளில் சட்டத் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன; கூடுதல் வரி விதிப்புக்கான நடவடிக்கைகள்—சலுகை வழங்குவதற்கான நடவடிக்கைகள் அல்லது சட்டங்களில் உள்ள ஓட்டைகளை நீக்குவதற்கான நடவடிக்கைகள் என்ற வகையில் இந்தச் சட்டத் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன; இவற்றின் விளைவாக நேர்முக வரிகளின் அமைப்பு அவசியமில்லாமல் சிக்கலாகியிருக்கிறது.

"எக்சைஸ் தீர்வை -- விற்பனை வரி ஆகியவை கணிசமான அளவில் ஒன்றின்மேல் ஒன்று விதிக்கப்படுவதாக ஆகின்றன.

"பட்டதாரிகள் சங்கம் நடத்தும் இந்த வகுப்பில் பங்குகொண்டவர்கள், வரிவிதிப்புக் கொள்கைகள் சம்பந்தமான பல்வேறு பிரச்சினைகள் குறித்து விவாதிக்க வேண்டும்; தற்போதைய வரி விதிப்பு முறையைச் சீர்திருத்துவது பற்றி பயனுள்ள யோசனைகளைக் கூறவேண்டும்."

இவ்வகுப்பில் பங்குகொண்ட சுமார் 60 பேருக்கு அண்ணாமலைப் பல்கலைக்கழக இணை வேந்தர் இராஜா சர் முத்தையா செட்டியார் நற்சான்றிதழ்களை வழங்கினர்; 'பட்ட மேற்படிப்புக்கு வகை செய்ய மேலும் பல கல்லூரிகள் தேவை' என்று அவர் கூறினர்.

"வரி விதிப்புச் சம்பந்தமான பிரச்சினைகளையும் -- அவற்றில் சம்பந்தப்பட்டுள்ள சிக்கலான பிரச்சினைகளையும் மீண்டும் மீண்டும் படிக்க வேண்டியது அவசியம்" என்று நீதிபதி டி. இராமப்பிரசாத் ராவ் கூறினர்.

# சிண்டிகேட் எம்.எல்.ஏ. தோல்வி

## ஊராட்சி ஒன்றியத் தலைவராகக் கழகத் தோழர் வெற்றி

அம்பாசமுத்திரம், நவ. 19—

நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் தேர்தலில், எஸ். எஸ். இராசலிங்கராசா (தி.மு.க.) வெற்றி பெற்ருர்.

எதிர்த்துப் போட்டியிட்ட சங்கமுத்துதேவர் (சிண்டிகேட் எம்.எல்.ஏ.) தோல்வியடைந்தார்.

தேர்தல் நேற்று காலை நடந்தது. இராசலிங்கராசாவுக்கு 8 ஓட்டுகளும், சங்கமுத்து தேவருக்கு 6 ஓட்டுகளும் கிடைத்தன.

இராசலிங்கராசா வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் நடந்த தேர்தலில், ஊராட்சி ஒன்றியத் தலைவராக சங்கமுத்து தேவர் தேர்ந்தெடுக்கப்பட்டார்; 'அந்தத் தேர்தல் செல்லாது' என்று சென்னை உயர் நீதிமன்றத்தில் தீர்ப்புக் கூறப்பட்டதால், தலைவர் தேர்தல் நேற்று மீண்டும் நடந்தது.

வேளாண்மைத் துறை அமைச்சர்

## அன்பில் தர்மலிங்கம் நிகழ்ச்சிகள்

நவ. 21 காலை 10 மணி : கடமங்குடி—திருமணம்; 11 மணி : கூட்டுறவு மத்திய வங்கி கருத்தரங்கு; மாலை 3-மணி : வலங்கைமான்—காவலர் இல்லம் திறப்பு; 6-மணி : திருப்பனந்தாள்—பொதுமக்கள் வரவேற்பு.

நவ. 22 காலை 9-மணி : அரியலூர்—பின்தங்கிய மாணவர்கள் விடுதி திறப்பு; 10 மணி : நாகமங்கலம்—ஊராட்சிமன்ற வரவேற்பு-- மின்விளக்கேற்று விழா; 11 மணி: மணக்குடி—ஊராட்சிமன்ற வரவேற்பு -- மின்விளக்கேற்று விழா.

கல்வி -- உள்ளாட்சித்துறை அமைச்சர்

## இரா. நெடுஞ்செழியன் நிகழ்ச்சிகள்

நவ. 21 காலை 10 மணி: திருவானப்புத்தூர் (மாயவரம் ஊராட்சி ஒன்றியம்)—மேல்நிலைத் தொட்டி, பள்ளிக் கட்டட அடிக்கல் நாட்டு விழா; 11 மணி: சோழம்பேட்டை—பள்ளிக் கட்டடத் திறப்பு; மதியம் 12 மணி : செம்பகச்சேரி—பள்ளிக் கட்டடத் திறப்பு; மாலை 4-மணி : மாயவரம் ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; 5-30 மணி: பட்டமங்கலம்—மின் விளக்கு ஏற்று விழா; 6-30 மணி: வேப்பங்குளம் — மின் விளக்கு ஏற்று விழா; இரவு 7-30 மணி: குத்தாலம்—பொதுமக்கள் வரவேற்பு.

# அரிசி விலைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை

## தேவையான இடங்களிலெல்லாம் நியாய விலைக் கடை திறக்கப்படும்

## சென்னை நகரில் கூட்டுறவுக் கடைகள் மூலம் மலிவு விலையில் முதல்தர அரிசி

### செய்தியாளரிடம் உணவமைச்சர் ப. உ. சண்முகம் விளக்கம்

சென்னை, நவ. 20—

"தமிழ்நாட்டில் தேவைப்படும் ஊர்களில் எல்லாம் நியாயவிலை அரிசிக் கடைகள் திறக்கும்படி மாவட்டக் கலெக்டர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

"சென்னை நகரில் முதல்தரமான அரிசி மலிவு விலையில் விற்பனை செய்வதற்காக டி. யூ. சி. எஸ். கடைகள் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்; இந்த மலிவு விலை அரிசி விற்பனை முழுவதும் கூட்டுறவுக் கடைகள் மூலம் வழங்கப்படமாட்டாது; விலை உயர்வைக் கட்டுப்படுத்துவதற்காகவே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது"

என்று உணவு அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்கள், செய்தியாளர்களிடம் விளக்கித் தெரிவித்தார்; மேலும் அவர் கூறியதாவது :—

"தமிழக அரசு கையிருப்பில் தேவையான அளவுக்கு அரிசி இருக்கிறது; உணவு நிலைமை திருப்திகரமாகவே இருக்கிறது.

"அரசாங்கக் கையிருப்பில் 35,000 டன் அரிசியும், உணவுக் கார்ப்பரேஷனிடம் 15,000 டன் அரிசியும் இருக்கிறது; இது மாநில தேவைக்குக் கிடைக்கும்.

"தஞ்சை மாவட்டத்தில் ஆரரை இலட்சம் ஏக்கர் நிலத்தில் 'ஐ. ஆர். 8' நெல்அறுவடை அடுத்த மாத முதல் வாரத்தில் தொடங்கும்; எனவே, உணவு நிலை குறித்துக் கவலைகொள்ளத் தேவையில்லை."

செய்தியாளர் :—"விலை உயர்வு காரணமாகவும், வங்க தேசப் பிரச்சினை காரணமாகவும் நெருக்கடி நிலை ஒருவேளை பிரகடனம் செய்யப்பட்டால் மீண்டும் அரிசிப் பங்கீடு செய்யப்படுமா ?"

அமைச்சர் :—"அதற்கு அவசியமே இல்லை உணவுத் துறையில் தமிழகம் தன்னிறைவு பெற்றிருக்கிறது; தமிழகத்தின் எல்லைப் பகுதியான கேரளத்திற்கு அரிசி கடத்தலைத் தடுக்க உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன."

### அரிசியின் அளவு குறைக்கப்பட்டதேன்?

செய்தியாளர் :— "படி அரிசித் திட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்டு வந்த அரிசியின் அளவு குறைக்கப்பட்டது ஏன் ?"

அமைச்சர் :— "அரிசி தாராளமாகக் கிடைப்பதே காரணமாகும்; படி அரிசித் திட்டம் காரணமாக அரசு ஆண்டொன்றிற்கு ரூ. 4 கோடி செலவிட்டு வருகிறது; அரிசி கிடைப்பதில் சிரமமில்லாத காரணத்தாலும் அரசு ஓரளவுக்கே உதவ முடியும் என்பதாலும் இந்த வெட்டு செய்யப்பட்டது; மேலும் படி அரிசித் திட்டத்தின் பெயரால் சில தவறுகள் -- போலிக் கார்டுகள் நடமாட்டம் ஆகியவற்றைத் தடுக்கவும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது."

கேள்வி :—"படி அரிசித் திட்டத்தின்கீழ் மலிவு அரிசி விற்பனை குறைந்துவிட்டதா ?"

அமைச்சர் :—"வழக்கமான அளவுக்கு விற்பனையாகிறது-குறையவில்லை."

"கோவையில் கண்டுபிடிக்கப்பட்ட படி அரிசிப் போலிக் கார்டுகளின் விளைவாக அரசுக்கு மாதம் ஒன்றிற்கு ரூ 75,000 மிச்சம் ஏற்பட்டது.

"டி. யூ. சி. எஸ் கடைகள் அனைத்தின் மூலமும் சென்னை நகரில் முதல்தர அரிசி விற்பனைக்கு விரைவில் ஏற்பாடு செய்யப்படும்."

## நவீன சாதனங்களுடன்

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

**இந்த நவீன ரகக் கருவிகளை குடியிருப்பவர்கள் தவணை முறையில் பணம் செலுத்தித் தங்களுக்கே சொந்தமாக்கிக் கொள்ள வாய்ப்பளிக்கும் மற்றொரு திட்டமும் ஆராயப்பட்டு வருகிறது.**

**ஒவ்வொரு குடியிருப்பிலும் ஒரு விளையாட்டுத் திடல் -- ஒரு பேரங்காடி -- சமூகக்கூடம் -- குடியிருப்பை நிர்வகிக்கும் பொருட்டு குடியிருப்போரால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் குழு ஆகியவை அமைக்கப்படும்.**

சிங்கப்பூர் நகரில் குடிசைகளில் வாழ்ந்த மக்களுக்கு புதிய குடியிருப்புகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுவிட்டன; இந்தக் குடியிருப்புகளில் உள்ள வீடுகள் மொசெயிக் தரையும் -- டிஸ்டம்பர் பூச்சுச் சுவர்களுமாகக் காட்சியளிக்கின்றன.

இதேபோன்ற வீடுகளை இங்கும் அமைக்கவியலுமா என்று ஆராய்ந்து பார்க்குமாறு நமது குடிசை மாற்று வாரியத்தின் கட்டடக் கலை நிபுணரிடம் கேட்டிருக்கிறேன்.

சிங்கப்பூரில் நகரத்தினுள் உருவாகும் இட நெருக்கடியைக் குறைக்கும் பொருட்டு நகருக்கு வெளியே பல குடியிருப்புகள் அமைக்கப்பட்டுள்ளன; இவை, தனித்தனி நகர அமைப்புகளாகவே விளங்குகின்றன.

இதேபோன்று, சென்னை மாநகராட்சியின் எல்லைப் பகுதிகளில்-- அரும்பாக்கம், திருவான்மியூர் போன்ற இடங்களில் -- நகர அமைப்புகளை நிறுவத் திட்டமிட்டிருக்கிறேன்.

சிங்கப்பூரில் வீடு கட்ட நிலங்களைப் பெறுவது மிக எளிதாக இருக்கிறது; இங்குள்ள தொல்லைகளும் சிக்கல்களும் அங்கு இல்லை; இங்கு அவ்வப்போதைய மார்க்கெட் நிலவரத்தின் படியே நிலங்கள் வாங்கப்படுகின்றன; ஆனால் சிங்கப்பூரில் எப்போதும் ஒரு குறிப்பிட்ட தொகையையே விலையாகக் கொடுத்து நிலம் வாங்கப்படுகிறது."

## சென்னை மாநகராட்சி 284-ம் ஆண்டுத் துவக்கவிழா

சென்னை மாநகராட்சி மன்றத்தின் 284-வது ஆண்டுத் துவக்க விழா 23—11—71 மாலை 3-30 மணிக்கு நேரு விளையாட்டரங்கில் நடைபெறும்.

தமிழக ஆளுநர் திரு. கே.கே. ஷா விழாவைத துவக்கிவைப்பார். கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் விழாவுக்குத் தலைமை வகிப்பார். திருமதி விசாலாட்சி நெடுஞ்செழியன் பரிசுகள் வழங்குவார்.

## அதிக விளைச்சல் தரும்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பைன்ஸ் ரக நெல் இங்கு அறிமுகப்படுத்தப்படும் என்றும் அதிக விளைச்சல் தரக்கூடிய இந்த ரக நெல் தானியம் சன்னமானதாகும் என்றும் அவர் இங்கு நிருபர்களிடம் தெரிவித்தார்.

## இந்தியத் தூதரக ஊழியர்கள் தாயகம் திரும்பினர்

### பகலில் பயணம் செய்ய அனுமதிக்கவில்லையாம்

பெரோஸ்பூர், நவ. 20—

இஸ்லாமாபாத் இந்தியத் தூதுவரகத்தில் பணிபுரியும் ஊழியர்கள் 26 பேர், நேற்று இந்தியாவுக்கு வந்து சேர்ந்தனர்.

எல்லையில் இவர்களை இந்திய அதிகாரிகள் வரவேற்றனர்.

இவர்களைப் பகலில் பயணம் செய்யப் பாகிஸ்தான் அனுமதிக்கவில்லையாம்.

போர் ஆயத்தங்களை இந்திய ஊழியர்கள் காணக்கூடாது என்பதற்காக இரவு 11-மணிக்கு மேல்தான் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டனர்.

மேலும் 11 ஊழியர்கள் இன்று இந்திய எல்லைக்கு வந்து சேருவர் என்று தெரிகிறது.

## வங்க தேச அகதிகளை ஆராய வெளி நாட்டுக் குழுவா ?

### 'இந்தியா விரும்பவில்லை' என அமைச்சர் விளக்கம்

புதுடில்லி, நவ. 20—

"வங்கதேச அகதிகள் குறித்து ஆராய எந்த வெளிநாட்டுக் குழுக்களும் வருவதை இந்தியா விரும்பாது"

என்று, நாடாளுமன்ற மேலவையில், வெளியுறவுத் துறை அமைச்சர் சுவரண் சிங் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

அகதிகள் பிரச்சினை சம்பந்தமாக ஆராய அமெரிக்கா தூதுக்குழு ஒன்றை அனுப்பும் என்று வெளியான செய்தி குறித்து, உறுப்பினர் ஒருவர் கொண்டுவந்த தீர்மானத்தின் மீது பேசுகையில் அமைச்சர், 'இப்படி ஒரு குழுவை அனுப்ப இந்தியாவை அமெரிக்கா இதுவரை அணுகவில்லை' என்றும், தெரிவித்தார்.

## இந்திரா காந்தி பிறந்த நாள்

### ஆடம்பரமின்றிக் கொண்டாடினர்

புதுடில்லி, நவ. 20—

தலைமையமைச்சர் இந்திரா காந்தி, தமது 54-வது பிறந்த நாளை நேற்று காலையில் புதுடில்லியில், ஆடம்பரங்கள் ஏதுமின்றி எளிய முறையில் கொண்டாடினர்; பின்னர் அவர், கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட ஒரிசா பகுதிகளைப் பார்வையிடுவதற்காகப் புறப்பட்டுச் சென்றார்.

நாட்டில் இன்று நெருக்கடி நிலவுவதாலும் -- ஒரிசாவில் கடல் கொந்தளிப்பால் 20,000 பேர் உயிரிழந்திருப்பதாலும் தம்முடைய பிறந்த நாளைக் கொண்டாட வேண்டாம் என்று அவர் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

தரைப் படை -- கப்பற் படை -- விமானப் படைகளின் தளபதிகள், பிறந்த நாள் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருந்தனர்.

### கலைஞர் வாழ்த்துச் செய்தி

அமெரிக்கா பால்டிமர் மருத்துவமனையிலிருக்கும் தமிழக முதலமைச்சர் கலைஞர், தலைமையமைச்சர் இந்திரா காந்திக்கு அனுப்பியுள்ள பிறந்த நாள் வாழ்த்துச் செய்தியில், 'இதுபோன்ற மகிழ்வான நாட்கள் பல வந்து தாங்கள் நீடுழி வாழ வேண்டும்' என்று வாழ்த்தியுள்ளார்.

### நாவலர் வாழ்த்துச் செய்தி

தி. மு. கழகப் பொதுச்செயலாளரும் - தமிழகக் கல்வி அமைச்சருமான நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், இந்திரா காந்திக்கு அனுப்பியுள்ள வாழ்த்துத் தந்தியில், 'தாங்கள் நீடுழி வாழ எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்; தங்களது சீரிய தலைமையின்கீழ் நமது நாடு இன்றைய சிக்கல்களையெல்லாம் களைந்து அமைதியான புதிய பொற்காலத்தில் அடியெடுத்து வைக்கப்போவது உறுதி' என்று கூறியுள்ளார்.

## ஆளுநருக்கு அதிகாரம்

### நிர்வாகச் சீர்திருத்தக் குழு பரிந்துரை -- அரசு ஏற்கவில்லை

புதுடில்லி, நவ. 19—

"குடியரசுத் தலைவரின் நேரடி ஆட்சியில் ஒரு மாநில ஆட்சி இயங்குகையில், மத்திய அரசினரை எந்தெந்த விவகாரங்களில் கலந்துகொண்டு செயல்படுவது என்பதை மாநில கவர்னரே தீர்மானிக்கலாம்; அதற்கான அதிகாரம் கவர்னர்களுக்கு அளிக்கப்பட வேண்டும்" என்று நிர்வாகக் குழு தெரிவித்திருந்த பரிந்துரையை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளவில்லை.

கவர்னர்களுக்கு--அவர்கள் விருப்பம்போல் அதுபோன்று செயல்படும் அதிகாரத்தை வழங்க மத்திய அரசு விரும்பவில்லை -- என்பது, மக்களவைமுன் வைக்கப்பட்ட அரசு அறிக்கையிலிருந்து தெரியவந்தது.

## சேலம் இரும்பாலைத் திட்ட அறிக்கை

### 'அடுத்த மாதம் கிடைக்கும்' என அமைச்சர் தகவல்

புதுடில்லி, நவ. 20—

"கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் தலைமையமைச்சர் இந்திரா காந்தியால் அடிக்கல் நாட்டப்பட்ட சேலம் இரும்பாலைத் திட்டத்தின் வேலைகள் தாமதப்படுகிறதே - என்ன காரணம் ?"

என்று நாடாளுமன்ற மேலவையில் ஆர். டி. பார்த்தசாரதி கேட்டார்.

அதற்குப் பதிலளித்து இரும்புத் துறை இணையமைச்சர் நாநவாஸ்கான் கூறியதாவது :—

"இரும்பு ஆலை அமைக்கப்படும் இடத்திற்கான 'சர்வே' வேலைகள் அனைத்தும் முடிந்துவிட்டன; இரும்பு ஆலைக்கு இரயில் போக்குவரத்து ஏற்படுத்தும் 'சர்வே'யும் முடிந்துவிட்டது.

"இரும்பாலையின் முழுத் திட்ட அறிக்கை அடுத்த மாதம் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது; அறிக்கை கிடைத்ததும் இரும்பு ஆலை அமைக்கும் வேலை தொடங்கும்.

"கஞ்சமலையில் உள்ள இரும்புத் தாதுப் பொருட்கள், ஜாம்ஷெட்பூரில் உள்ள ஆய்வுக் கூடத்தில் சோதனை செய்யப்பட்டு வருகிறது; இரும்பு ஆலைக்கும், அதன் குடியிருப்புப் பகுதிகளுக்கும் தண்ணீர் வழங்கும் திட்டத்தை மாநில அரசு பரிசீலனை செய்து வருகிறது."

## இலங்கையிலிருந்து முதல் தடவையாக பீர் இறக்குமதி

கொழும்பு, நவ. 20—

இலங்கையிலிருந்து முதல்தடவையாக இந்தியாவுக்குப் பீர் ஏற்றுமதியாகவிருக்கிறது. இதற்கான ஒப்பந்தம் ஒன்றை சென்னை நிறுவனத்துடன் இலங்கை பீர் தயாரிப்பு நிறுவனம் செய்து கொள்ளும்.

இலங்கையின் ஏற்றுமதியைப் பெருக்க வகைசெய்யும் ஒப்பந்தம் ஒன்றை இந்திய வெளிநாட்டு அமைச்சர் அண்மையில் இலங்கைக்குச் சென்றபோது செய்துகொண்டிருந்தார்; இதன்படி, இலங்கையிலிருந்து டயர், கொப்பரை, தேங்காய் எண்ணெய்போன்ற பொருட்களையும் இறக்குமதி செய்ய இந்தியா விருப்பம் தெரிவித்திருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும்; அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, [illegible] செங்குதி தெரு, சென்னை-18) அச்சிட்டு வெளியிடப்பெற்றது.